ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/05 - 2023 ජූලි මස 31 වැනි සඳුදා - 2023.07.31

*2343/05 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், என்னால் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2023, யூலை 31.

**அட்டவணை**

(1) குறித்த அறிவித்தலில் ''இல. 02. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்'' எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலில் இல. 71 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம் ;

72. சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்
73. தேசிய உபகரணங்கள் அமைப்பாண்மை

(2) குறித்த அறிவித்தலில் "இல. 10. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலில் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

2. சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்

(3) குறித்த அறிவித்தலில் "இல. 14. கமத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 40 விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

41. விலங்கு உணவுகள் பொருட்டு தேவையான சோளத்தை நாட்டினுள் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 41 மற்றும் 42 விடயங்களை முறையே இல. 42 மற்றும் 43 என்றவாறு மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(4) குறித்த அறிவித்தலில் "இல. 16. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் III ஆம் நிரலில் "சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம் (1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

* புனர்வாழ்வுப் பணியகம் சட்டம் (2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க)

(5) குறித்த அறிவித்தலில் "இல. 18. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலில் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

27. திரிபோஷ மற்றும் விலங்கு உணவுகள் பொருட்டு தேவையான சோளத்தை நாட்டினுள் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்

(6) குறித்த அறிவித்தலில் "இல. 20. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலில் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

27. பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கஷ்டமான கிராமியப் பிரதேசங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்

(ஆ) அதன் II ஆம் நிரலில் பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம் ;

13. தேசிய உபகரணங்கள் அமைப்பாண்மை

(இ) அதன் III ஆம் நிரலில் "கரையோரம் பேணற் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க)" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

* ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டம் (2022 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க)

(7) குறித்த அறிவித்தலில் "இல. 22. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் II ஆம் நிரலில் இல. 19 பின்வரும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

20. அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்

(ஆ) அதன் III ஆம் நிரலில் "காலி பாரம்பரிய மன்றச் சட்டம் (1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க)" விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம் ;

* அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச் சட்டம் (2018 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க)

EOG 07-0291

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.